தமிழ்நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1974 சனவரி 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 151, 152, 153, 154, 155 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்

***156 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீரங்கம் நகரத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்த அரசு அனுமதித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ஸ்ரீரங்கம் நகரத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம் **4—3—1971**-ல் அமைப்புச் செலவு ரூ. 19.61 லட்சத்திற்கும் ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ. 70,000-க்கும் அரசு ஒப்புதல் அளித்தது. மக்கள் தொகை வளர்ச்சியை முன்னிட்டு மேற்படி மதிப்பீடு திருத்தப்பட்டது. திருத்திய மதிப்பீட்டின்படி திட்ட அமைப்புச் செலவு ரூ. 28.75 லட்சம் மற்றும் ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ. 95,000-க்கும் 16—3—1973-ல் அரசின் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. இத்திட்டம் திருவானைக்கோவில் மற்றும் மேலூர்

ஆகிய இரு ஊர்களுக்கும் விரிவு படுத்தப்படும். இத்திட்டத்திற்கான எல்லா வேலைகளுக்கும் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தப் பணி எப்பொழுது முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது? ஒரு நாளைக்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு பணியாக, தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு, பணிகள் பல கட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தலைப்பிடப் பணிகள் வேலை துவக்கப்பட்டு, வடிகிணறு 5.75 மீட்டர் ஆழத்திற்கு இறக்கப்பட்டு, மேற்கொண்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. நீர்த்தேக்கத் தொட்டி பகிர்மான குழாய்கள் அமைக்கும் வேலைகளுக்கான திட்ட மதிப்பீடு ரூ. 13.34 லட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பகிர்மான குழாய்கள் அமைக்கும் வேலைகள் 97 சதவிதம் முடிவடைந்துள்ளன. இன்னும் ஒரு சிறு பகுதிதான் முடிவடைய வேண்டும். நீரேற்றுக் குழாய் வேலை வருகிற ஆண்டில் பெருமளவு முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் எவ்வளவு தண்ணீர் வழங்குவது என்ற புள்ளிவிவரம் இப்பொழுது என்னிடம் இல்லை.

*** 157 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்மலை நகரப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படுவதற்கான திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) பொன்மலை நகராட்சி, ஆலத்தூர் பேரூராட்சி மற்றும் வழியிலேயுள்ள கிராமங்களுக்கும் சேர்த்து ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது. இத்திட்டத்தில் அமைப்புச் செலவு ரூ. 87,50,000 எனவும் பராமரிப்புச் செலவு ரூ. 2,95,000 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.